ජාතික සමගිය හා සංහිඳියා කාර්යාංශය
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

European Union
යුරෝපා සංගමය ஐரோப்பிய ஒன்றியம்

*For Immediate Release*
*16.06.2017, Colombo.*

# தேசிய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் “அபிலாஷை” புகைப்படக்கண்காட்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தூதுக்குழுவுடன் இணைந்து, ‘‘அபிலாஷை’’ எனும் தலைப்பில் புகைப்படக்கண்காட்சி ஒன்றை 2017 செப்டெம்பர் மாதத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளன. இதன் மூலம் இலங்கை சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் பூர்த்தியை எய்தவுள்ள நிலையில், சாதாரணமானதும், சமத்துவமானதும் சமூகத்தை கட்டியெழுப்பும் பயணத்தில் இலங்கையர்களுக்கு நல்லிணக்கம் என்பது எதனை உணர்த்துகிறது என்பதை வெளிப்படுத்துவதே இதன் இலக்காக அமைந்துள்ளது.

நல்லிணக்கம் தொடர்பில் தாம் எடுத்த புகைப்படங்களை சமர்ப்பிக்குமாறு தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு ஆகியன நிபுணத்துவம் வாய்ந்த மற்றும் சாதாரண புகைப்படக்கலைஞர்களிடம் கோரியுள்ளன. இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களிலிருந்து 70 சிறந்த படங்கள் தெரிவு செய்யப்பட்டு, நிபுணத்துவம் வாய்ந்த நடுவர்கள் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு, 2017 செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுக் கண்காட்சியின் போது காட்சிப்படுத்தப்படும். அத்துடன், தெரிவு செய்யப்படும் படங்கள், 2018ம் ஆண்டுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் நாட்காட்டியில் பிரசுரிக்கப்படும் என்பதுடன், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் வெளியிடப்படவுள்ள கையேட்டிலும் பிரசுரிக்கப்படவுள்ளது.

சாதாரண புகைப்படக்கலைஞர்கள் தமது ஸ்மார்ட்ஃபோன்களினூடாக எடுக்கும் படங்களை கூட சமர்ப்பிக்க முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். சாதாரண நிலை மற்றும் நிபுணத்துவ நிலை ஆகிய பிரிவுகளில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

இந்த நடவடிக்கை தொடர்பில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தலைமை அதிகாரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கருத்துத் தெரிவிக்கையில், ‘‘மாணவர்கள், கல்விமான்கள், பல்கலைக்கழகங்கள், கொள்கை வகுப்பாளர்கள், சிவில் சமூகம் மற்றும் மதகுருமார் போன்ற வெவ்வேறு நிலைகளைச் சேர்ந்தவர்களுடன் தேசிய ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் எவ்வாறு முன்நோக்கி கொண்டு செல்வது என்பது பற்றி தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் செயலாற்றி வருகிறது. தற்போதைய அரசாங்கத்தின் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளுக்கமைய இது அமைந்துள்ளதுடன். இந்த புகைப்படக்கண்காட்சி என்பது, பொது மக்களுக்கு இந்த விடயம் தொடர்பில் மேலும் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்த உதவியாக அமையும் என்பதுடன், அவர்களுக்கு நல்லிணக்கம் என்பதால் என்ன உணர்த்தப்படுகிறது என்பதை ஆக்கபூர்வமான வகையில் தெரிவிக்கக்கூடியதாக இருக்கும்’’ என்றார்.

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அவசியமான உதவிகளை வழங்குவது என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய விடயங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. இதற்காக நாம் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்துடன் நாம் கைகோர்த்து, இந்த நடவடிக்கையினூடாக இலங்கையர்களுக்கு தமது எதிர்பார்ப்புகளை நாட்டின் எதிர்காலத்துக்காக வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க நாம் கைகோர்த்துள்ளோம். இந்த கண்காட்சியானது சக இலங்கையர்களுடன் ஒருமைப்பாடு பற்றி கலந்துரையாடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க ஏதுவாக அமைய வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். நல்லிணக்கத்தின் மூலமாக, நாட்டில் காணப்படும் பரந்த மக்கள் மற்றும் கலாசாரங்கள் ஆகியவற்றை ஒருமைப்படுத்த முடியும் என நாம் கருதுகிறோம்’’ என ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் ஆலோசகர் போல் கொட்ஃபிரி கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

**எவ்வாறு சமர்ப்பிப்பது:**

Image resolution: **In the highest possible resolution and native format**

சமர்ப்பிக்கும் படத்தின் அளவு: **25MB** ஐ விட அதிகரிக்காமல் இருப்பது.

தகவல்: புகைப்படவியலாளரின் பெயர், புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் மற்றும் விண்ணப்பத்துக்கான தலைப்பு

மின்னஞ்சல் ஊடாக அனுப்ப: **hope.exhibition2017@gmail.com**

மேலதிக விவரங்களை பத்திரிகைகளிலும், பின்வரும் லிங்க்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்:

*ONUR Facebook*: www.facebook.com/ONURgovLK
*EU Delegation Facebook*: www.facebook.com/EUDel.Srilanka.Maldives

-End-

Attached – High Resolution Logo of Hope Exhibition

අපේක්ෂා
அபிலாஷை
HOPE
ඡායාරූප ප්‍රදර්ශනය 2017
புகைப்பட கண்காட்சி 2017
Photography Exhibition 2017

Contacts:

*Political, Trade and Communications Section*
Delegation of the European Union to Sri Lanka and the Maldives
Tel: + 94 11 2674413
Email: delegation-sri-lanka-press-and-information@eeas.europa.eu
Web: www.eeas.europa.eu/delegations/sri_lanka
Facebook: www.facebook.com/EUDel.Srilanka.Maldives
Twitter: @EU_in_Sri_Lanka

*Communications and Outreach Division*
Office for National Unity and Reconciliation
Tel: + 94 11 2343501
Email: ad.cod@onur.gov.lk
Web: www.onur.gov.lk
Facebook: www.facebook.com/ONURgovLK
Twitter: @ONURgovLK